# கண்மாய் பணி மக்கள் பாராட்டு

அன்னவாசல், ஜூன் 9: அன்னவாசல் ஒன்றியம் பரம்பூர் பிள்ளங்குடி கண்மாயில் ரூ.7 லட்சத்தில் மராமத்து மற்றும் ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வந்தது. பணி தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது.

பணியை பாராட்டி முதல்வர் கருணாநிதி, துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர், அதிகாரிகளுக்கு கிராம மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

நீர்பாசன கமிட்டி தலைவர் ராஜு, துணைத்தலைவர் கணேசன், உறுப்பினர்கள் சுப்பையா, செல்வராஜ் கலந்து கொண்டனர்.